[திரு. எஸ்.பி. வேலுமணி] [*2020 பிப்ரவரி 20*

ஏதுவாக, தற்போது இப்பாலத்தில் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இரயில்வே பகுதி பாலப் பணிக்கான மதிப்பீடுகள் இரயில்வே துறையால் தயாரிக்கப்பட்டு பழைய பாலத்தினை இடித்துவிட்டு, புதிய பாலம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே, இரயில்வே துறையால் பழைய பாலத்தினை இடிப்பதற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவை இறுதி செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தளவாடங்களை மாற்றியமைத்த பின்னர், பழைய பாலத்தினை இடிப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் எனவும், புதிய பாலத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தனியே கோரப்படும் எனவும் இரயில்வே துறை அறிவித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, மிக அதிகமான விலைப்புள்ளி பெறப்பட்டதால், இந்த ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி நாள் 6–3–2020; ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின்னர், இரயில்வே துறையின் பணிகள் துவங்கப்படும்போது, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) தூத்துக்குடி மாவட்டம், கடற்கரை மீனவக் கிராமங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவக் கிராமங்களாக இருக்கின்ற ஆலந்தலை, வீரபாண்டியன்பட்டணம், அமலிநகர், மணப்பாடு, பெரியதாழை ஆகிய கடற்கரைக் கிராமங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்படுவது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஆலந்தலை கிராமத்தில் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறை கடலரிப்பு தடுப்புக் கூட்டம்மூலம் ரூபாய் 52 கோடியே 46 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, தற்போது பொதுப் பணித் துறையினுடைய பரிசீலனையில் உள்ளது. அதன்பின் தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியன்பட்டணம் கிராமத்தில் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி CSR நிதியைக்கொண்டு 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை கிராமத்தில் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு மீன் வளத் துறைமூலம் 30 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

4. அறிவிப்புகள்

(அ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்தும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்களின் வினா எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் விவரங்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கைகள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக தலா 1 முதல் 100 வரையிலான வினாக்கள்–விடைகளை உள்ளடக்கிய 2020 ஆம் ஆண்டிற்கான நான்காவது மற்றும் ஐந்தாவது உடுக்குறியிடாத